DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.54/2025**
Prosecution Witness P.W.9

Name : **திரு.முத்துராஜா** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 10.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் பல்லவராயன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். துர்கா ஸ்டுடியோ என்ற பெயரில் ஸ்டூடியோ நடத்தி வருகிறேன். இந்த வழக்கு தொடர்பாக சின்னமனூர் காவல் ஆய்வாளர் என்னை அழைத்தார். சங்கிலி ராஜா, ஜமுனா ராணி, ப்ரின்ஸ் டேனியல், ராஜாராம், ராஜவேல், மாரீஸ்வரன் ஆகியோர் வாக்குமூலம் ஆய்வாளர் விசாரிக்கும் போது அவர்கள் சொன்ன விபரங்களை பதிவு செய்து கொண்டேன். ராஜவேல் பயன்படுத்திய இருசக்கர வாகனம், கத்தி, பிவிசி பைப் வகைகள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்தேன். சதீஷ்குமார் எடுத்துக் கொடுத்த இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை புகைப்படம் எடுத்தேன். சதீஷ்குமார், தீபக் ராஜா மற்றும் ஒருவர் எனக்கு பெயர் தற்போது ஞாபகமில்லை ஆகியோர் கத்தி எடுத்து கொடுத்தார்கள். முருகன் செல்போன் எடுத்து கொடுத்தார்.

2. மூன்று இடங்களுக்கு சென்று அவ்வாறு கைப்பற்றும் போது நான் வீடியோ பதிவு எடுத்தேன். இது சம்பந்தமாக மொத்தம் 6 பென்டிரைவ்களை நான் ஆய்வாளரிடம் கொடுத்தேன்..அந்தப் பென் டிரைவ் தற்போது என்னிடம் காண்பிக்க கூடிய பென் டிரைவ் அது சம்பந்தமாக நான் வழங்கிய சான்றிதழ்

மற்றும் ரசீது அ.சா.ஆ.21 மற்றும் 22. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் கடை நடத்துவதற்கு பதிவு செய்ததால் தொழில் செய்து வருகிறேன். அது சம்பந்தப்பட்ட சான்றிதழ் எதையும் ஆய்வாளர் விசாரணையில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு சட்டப்பிரிவு 63(4) குறித்து தெரியாது என்றால் சரிதான். நான் பதிவு செய்த வீடியோ பதிவு ஒவ்வொரு சாட்சியும் எவ்வளவு நேரம் விசாரித்து இருப்பார்கள் என்றால் சுமார் 5 லிருந்து 10 நிமிடம் விசாரித்து இருப்பார்கள். அந்த பென்டிரைவ்–ஐ நானே வாங்கி அதில் வீடியோ பதிவுகளை காப்பி செய்து போலீசார் வசம் ஒப்படைத்தேன். அந்தப் பென்டிரைவ்–ஐ வாங்கிய தொடர்பான ரசீதுகள் எதையும் நான் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் அவ்வாறு வாங்கிய பென்டிரைவ் பெயர் என்ன அது எவ்வளவு திறன் கொண்ட பென்டிரைவ்– என்ற விபரத்தையும் நான் ஆய்வாளர் வசம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விபரங்கள் முழுமையாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.10 15:17:44 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.